**எஸ்.டி.சி.எண். 148/2022 தேதி - 25.04.2023**

<u>ம.சா.1 ஆன Mrs.Chandra என்பவர் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார்.</u>

23.12.2021 ஆம் தேதியன்று எதிரியின் தாயார் தான் என்வசம் காசோலை கொடுத்தார் என்று சொன்னால் எதிரி தான் கொடுத்தார். அவருடைய அம்மா உடனிருந்தார். திருமுல்லைவாயிலில் உள்ள எனது வீட்டில் வைத்து காசோலை கொடுத்தனர். காசோலை பூர்த்தி செய்யப்படாமல் என்வசம் கொடுக்கப்பட்டது. காசோலையை நான் என்றைய தினம் வங்கியில் செலுத்தினேன் என்று ஞாபகமில்லை. காசோலையில் கண்ட தேதியின் விவரமும் ஞாபகமில்லை. இரண்டு முறை நான் காசோலையை வங்கியில் செலுத்தினேன். நான் மேற்குறிப்பிட்ட சங்கதியை வழக்கறிஞர் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் ஞாபகமில்லை. முதல் முறை காசோலை திருப்பப்பட்ட தேதி தெரியுமா என்றால் தெரியாது. செக் திருப்பப்பட்டது குறித்து நான் எதிரிக்கும் எதிரியின் அம்மாவுக்கும் தெரிவித்தேனா என்றால் இல்லை. நான் காசோலை திருப்பப்பட்டவுடன் வக்கீல் நோட்டீஸ் எதுவும் அனுப்பவில்லை. எதிரியின் அம்மா கொடுத்த எதிரியினுடைய பூர்த்தி செய்யப்படாத காசோலையை பூர்த்தி செய்து அந்த காசோலையில் கையொப்பத்தையும் நானே செய்து எதிரி மீது பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் எதிரி தான் காசோலையை கொடுத்தார். எதிரி காசோலையில் கையொப்பம் செய்து இதர சங்கதிகளை பூர்த்தி செய்யாமல் என்வசம் கொடுத்தார். 23.12.2021 ஆம் தேதியன்று எதிரி என்வசம் காசோலை கொடுத்ததாக நான் கூறியுள்ளேன் என்றாலும், அந்த மாதம் எதிரி தமிழ்நாட்டில் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 28.02.2022 அன்று காசோலையை தாக்கல் செய்யும்படி எதிரி என்னிடம் தொலைபேசி மூலம் கூறினார் என்று நான் எனது குறுக்கு

விசாரணையில் கூறியுள்ளேன் என்றாலும், அந்த மொபைல் நம்பர் தெரியுமா என்றால் அந்த நம்பர் உள்ளது. ஆனால் தற்போது ஞாபகமில்லை. 28.02.2022 ற்கு முன்பு நான் காசோலையை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். எதிரி என்னிடம் கடன் எதுவும் வாங்கவில்லை என்றாலும், காசோலை எதுவும் கையொப்பம் செய்து கொடுக்கவில்லை என்றாலும், எதிரி மீது நான் பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கு காசோலைகளில் எதிரி கையொப்பம் செய்யவில்லை என்றாலும், நான் கையொப்பம் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. எதிரி மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள பொய் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்று சொன்னால் சரியல்ல.

Sd/- (Tmt.A.Theviya),
Judicial Magistrate,
Fast Track Court,
Ambattur.

//True Copy//
Judicial Magistrate,
Fast Track Court,
Ambattur.